விஜிதரன் விவகாரம்

04/12/86

# பல்கலைக்கழக மாணவர் பிரசார பாதயாத்திரை மேற்கொள்ள முடிவு

நல்லூர், புதன்

யாழ் பல்கலைக்கழக மாண ர் இன்று வியாழக்கிழமை ல் ஒரு வார காலம் அராஜகத்திற்கு எதிரான ாராட்ட வாரமாகப்" பிர னம் செய்து தொடர்ந்து ந்து நாட்களுக்கு யாழ் ாநாடு முழுவதும் பிர ரப் பாதயாத்திரை ஒன்றை ற்கொள்ளவுள்ளனர்.

லகலைக்கழக மாணவர் ால் கடந்த வாரம் க்கப்பட்ட ஐந்து லைகளையும் சகல விடு இயக்கங்களும் ஏற்றுக் ண்டதையடுத்து கடந்த ளி உண்ணாவிரதம் கை ப்பட்டது எனினும் காணாமல்போன விஜிதரன் மீண்டும் திரும்பும் வரை பல வடிவங்களிலான சாத்வீகப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்குமென உண்ணாவிரத முடிவில் மாணவர் அமைப்புக் குழு தெரிவித்திருந்தது.

அதன் பிரகாரம் முதற் கட்டமாக கடந்த வெள்ளி முதல் நேற்று புதன் வரை சகல வகுப்புகளையும் பகிஸ்கரித்தனர். இதனையடுத்து நேற்றுக்காலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர்கள் "அராஜகத்திற்கெதிரான போராட்ட" வாரமாகப் பிரகடனம் செய்து, இன்று முதல் ஐந்து நாட்களுக்கு யாழ். குடாநாடு முழுவதும் பிரசாரம் செய்வதாக முடிவு செய்யப்பட்டது. இதன்படி ஆகக்குறைந்தது 30 பேர் கொண்ட ஐந்து குழுக்கள் முறையே தீவுப்பகுதி, வடமராட்சிப்பிரிவு, தென்மராட்சிப்பிரிவு, பருத்தித்துறை வீதியூடாக இருபாலை, கோப்பாய் அச்சுவேலியை அடங்கிய பகுதி கே. கே. எஸ். வீதியூடாக மானிப்பாய், காங்கேசன்துறையை உள்ளடக்கிய பகுதி ஆகிய பிரதேசங்களிலும் பிரச்சாரப் பாதயாத்திரையை நடாத்தவுள்ளனர்.

இப்பாத யாத்திரையில் இவர்கள் செல்லும் பிரதேசம் எங்குமுள்ள மக்களைச் சந்தித்து இவ்யாத்திரையின் முக்கியத்துவம் பற்றி விரிவாக விளக்குவார்கள். (சி)

## இன்று வெகுஜன அமைப்புக் கூட்டம்

(நல்லூர்)

இன்று காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் வெகுஜன அமைப்புகளின் கூட்டமொன்று நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து பிரச்சாரப் பாதயாத்திரை ஆரம்பமாகும். (சி)